கைக்கடிகாரம்!
அழகுசாதன, அன்பளிப்பு,
எவர்சில்வர்,
விளையாட்டுப்
பொருள்களுக்கு
நாடுங்கள்!
ராஜு
ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார்வீதி.
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு விலை ரூபா 5-00 Registered as a Newspaper

# உதயன்

நெல்லுடைக்கும்
மா அரைக்கும் இயந்திர
உதிரிப்பாகங்கள்
மற்றும்
பொலித்தீன்,
கேக், குளிர்பான
தயாரிப்புக்களுக்கு
ராஜு
ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 01 வியாழக்கிழமை (15 – 06 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 199

## மண்டைதீவுக் கடலில் கடற்படை வெறியாட்டம்! மீனவர் பலி; ஒருவர் காயம்; 10 பேர் கைதாகினர்!

யாழ்ப்பாணம், ஜூன் 15

மண்டைதீவுக் கடலில் நேற்று விடியும் வேளை ஸ்ரீலங்கா கடற்படையினர் நடத்திய வெறியாட்டத்தில் மீனவர் ஒருவர் பலியானார்; அவரது மகன் காயமுற்றார்; பத்து மீனவர்கள் படையினரால் பிடித்துச் செல்லப்பட்டனர்.

மண்டைதீவு முகத்துவாரம் கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் படகுகள் மீது நேற்றுக் காலை 5.30 மணியளவில் கடற்படையினர் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தினர்.

இதனால் அந்தோனிப்பிள்ளை மரியதாஸ் (47 வயது) என்ற மீனவர் கொல்லப்பட்டார்.

அவரது மகனான ஜெயன் என்பவர் படுகாயமடைந்தார்.

சோமபாலா செபஸ்டியன் (48 வயது), பேர்சி போமன் (30 வயது), மரிசலீன் அலெஸ்ரீன் (37 வயது), அன்ரன் நிக்சன் குமார் (11 வயது), பிரான்ஸிஸ் யூமன் பெனஸ்ரியஸ் (17 வயது), சின்னமணி ரமேஸ் (16 வயது), அன்போன்ஸ் சுரேன் (19 வயது), லோறன்ஸ் கனகு (46 வயது)

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர்களை விடுவிக்க செஞ்சிலுவையினர் முயற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 15

மண்டைதீவுக் கடற்பகுதியில் வைத்து படையினரால் பிடித்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் 10 மீனவர்களையும் விடுவிக்கும் முயற்சியில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகள் நேற்றே கொழும்பில் உள்ள தலைமை அலுவலகத்துக்கு தெரிவித்துள்ளனர்.

யாழ் அலுவலக அதிகாரி ஜோர்ஜ் குலஸ் நேற்று குருநகர்ப் பகுதிக்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து உரையாடினார்.

# மட்டு. மாவட்டத்தில் புலிகள் அதிரடி! காவல் நிலையத்தைக் கைப்பற்றினர்!!

## 5 பொலீஸ் பலி; சடலங்களும் மீட்பு

கொழும்பு, ஜூன் 15

ஸ்ரீலங்கா படையினரின் தீவிர பாதுகாப்புக்கு உட்பட்ட மட்டக்களப்பு செட்டிபாளையத்தில் விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தி அங்கிருந்த பொலீஸ் நிலையத்தைக் கைப்பற்றினர்.

தாக்குதலில் ஐந்துக்கும் மேற்பட்ட பொலீஸார் கொல்லப்பட்டனர். அவர்களின் ஐவரின் சடலங்களைப் புலிகள் கைப்பற்றினர். ஆயுதங்களையும் புலிகள் அள்ளி எடுத்தனர்.

நேற்று முன்தினம் இரவு 11.25 மணிக்கு இத்தாக்குதல் நடத்தப்பட்டது. 15 நிமிட நேரத் தாக்குதலில் பொலீஸ் நிலையம் புலிகளின் பூரண கட்டுப்பாட்டிற்குள் வந்தது.

எதுவித இழப்புகளுமின்றி அங்கிருந்த ஆயுதங்களை அள்ளி எடுத்துக்கொண்டு புலிகள் வெற்றிகரமாகத் திரும்பினர். (உ-3-6-14)

## கைப்பற்றிய ஆயுதங்கள்

மட்டக்களப்பு செட்டிபாளையம் பொலீஸ் நிலையம் மீது நடத்திய தாக்குதலின் போது புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்கள் வருமாறு:-

- ★ 40 மி மீ பிஸ்டல் — 2
- ★ 40 மி மீ ஷெல்கள் 34
- ★ ரி 56 — 1ரக துப்பாக்கி — 3
- ★ ஏ கே. ரவைக்கூடு — 7
- ★ நடுத்தர ரக ரவைகள் — 2 119
- ★ ஜே ஆர். கைக்குண்டு — 3
- ★ பொலீஸ் செட் - 1
- ★ ராணுவ இடுப்புப்பட்டி — 1
- ★ தண்ணீர்க் கொள்கலன் — 1
- ★ பைகள் — 3
- ★ பரா லைட் — 1
- ★ விநியோக ரவைக் கூடு தாங்கி அணி — 1

## செங்கலடியில் 5 தமிழர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஜூன் 15

செங்கலடி மகா ஓயாப்பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

இதன் பின் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் நான்கு பெண்கள் உட்பட 5 தமிழர்கள் கொல்லப்பட்டதாக புலிகளின் குரல் அறிவித்தது. (உ-3-14)

## இலங்கையில் இந்திய தலையீட்டை ஆட்சேபித்து சென்னையில் கூட்டம்

சென்னை ஜூன் 15

இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிட முயற்சிப்பதற்கு எதிராக பொதுமக்கள் அபிப்பிராயத்தை திரட்டும் நோக்குடன் கடந்த 6 ஆம் திகதி சென்னையில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

புலிகளுக்கு ஆதரவானவர்கள் இந்தக் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தனர்.

திராவிட கழகத்தைச் சேர்ந்த வீரமணி, தேசிய இயக்கத்தைச் சேர்ந்த பி. நெடுமாறன், பாட்டாளி மக்கள் கட்சிப் பிரதிநிதிகள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்திய இராணுவ தலையீட்டுக்கெதிராக பொதுமக்கள் அபிப்பிராயத்தை திரட்டும் நோக்குடன் திரு. நெடுமாறன் சகல அரசியல் கட்சிகளையும் கூட்டத்துக்கு அழைத்திருந்தார்.

மீண்டும் இலங்கைக்கு இந்தியப் படையை அனுப்புவது முட்டாள்தனமான செயலென பெரும்பான்மையான பேச்சாளர்கள் அக்கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தனர்.

இந்திய அமைதிப்படை முன்னர் மேற்கொண்ட படுகொலைகள், கற்பழிப்புக்கள் குறித்து பலர் கண்டனம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசனுக்கு வெளியே கப்பல்கள் சோதனை!

### செஞ்சிலுவை அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடக்கே வரும் சரக்குக் கப்பல்கள் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வெளியே நிறுத்தப்படும் என்றும்—

அங்கு வைத்தே கடற்படையினர் தமது சோதனைகளை மேற்கொள்வர் என்றும்—

செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவின் யாழ் அலுவலக அதிகாரி ஜோர்ஜ்குலஸ் உதயனுக்குத் தெரிவித்தார்.

கப்பல்களை சோதனை செய்வதை நாம் ஒருபோதும் தடுக்கமாட்டோம்.

வழமை போல சரக்குக் கப்பல்கள் வடக்கே வரும். அக்கப்பல்களுக்கு எமது அமைப்பு தொடர்ந்து பாதுகாப்புவழங்கும் — என்றும் அவர் தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வழமையான நாட்களில் படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 15

இலாலி — பூநகரி படகுச் சேவை இன்று முதல் வழமையான நாட்களில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். [உ-2]

## ஸ்ரீலங்கா ராணுவ உதவி கோரினால் அது குறித்து ஜேர்மனி பரிசீலிக்கும்

### அந்நாட்டு தூதரகப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஜூன் 15

ஸ்ரீலங்கா அரசு இராணுவ உதவி வழங்குமாறு வேண்டுகோள் விடுத்தால் ஜேர்மன் அரசு அதுபற்றி பரிசீலனை செய்யும் என ஜேர்மன் தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு இராணுவ பொருளாதார உதவிகளை வழங்கும் வாய்ப்புகள் பற்றி ஆராய்வதற்காக ஜேர்மனிய உயர்மட்ட தூதுக்குழு ஒன்று நேற்று இலங்கை வந்துள்ளது.

வில்லிவிமர், வோல்டர் கொபோப் றொனால்போத்தவால ஆகிய 3 நாடாளுமன்ற பிரேஸ் — உறுப்பினர்களும் இந்தக் குழுவில் அடங்குவர்.

2வார காலம் இலங்கையில் தங்கவுள்ள இந்தக் குழுவினர், நீதி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அநுருத்த ரதவத்த, சபாநாயகர் கே.பி. ரத்நாயக்கா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்து ஆலோசனை நடத்துவர்.

ஜேர்மனுக்கு விஜயம்செய்த இலங்கை வெளிநாட்டு அமைச்சர் லஷ்மன் கதிர்காமரின் அழைப்பின் பேரிலேயே இந்தக் குழுவினர் இங்கு வந்துள்ளனர். (ஓ-14)

## இந்துக்கள் இன்று கண்டனப் பேரணி!

யாழ்ப்பாணம், ஜூன் 15

இந்துக்களுக்கு எதிரான அரசாங்கத்தின் அடாவடிகளை அம்பலப்படுத்தும் விதத்திலும், அவர்களின் மத சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளதைக் கண்டித்தும், இன்று யாழ்ப்பாணத்தில் பிரமாண்டமான கண்டனப் பேரணி நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் பேரணியில் இந்து சமூகத்தின் அனைத்துத் துறைகளைச் சேர்ந்தவர்களும் பல்லாயிரக்கணக்கில் கலந்து கொள்ள உள்ளனர்.

மத குருமார்கள் இந்து அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், ஆலயங்களின் பரிபாலன சபையினர்கள், மகளிர் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் வர்த்தக நிலையங்களின் பணியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அடியார்கள், பொதுமக்கள் என்று பல துறைகளைச் சேர்ந்தவர்களும் பேரணிக்கு ஆதரவு தெரிவித்துள்ளதோடு அதில் கலந்து கொள்ளவும் ஏற்பாடாகி உள்ளது.

கண்டனப் பேரணி இன்று காலை பத்து மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவிலில் இருந்து செயலகம் நோக்கிப் புறப்படும்.

### பிரார்த்தனை

பேரணி ஆரம்பமாவதற்கு முன்னர் காலை 9 மணி தொடக்கம் கந்தசுவாமி கோவிலில் விசேட பிரார்த்தனை இடம்பெறும்.

பேரணி கோவில் வீதி வழியாக ஆஸ்பத்திரி வீதி, கண்டி வீதி என்பன ஊடாகச் சென்று யாழ். செயலகத்தை அடையும்.

ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு விலாசமிடப்பட்ட மகஜர் செயலகத்தில் வைத்து யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்படும்.

இதற்கு முன்னர் மகஜரின் பிரதிகள் கோவில் வீதியில் உள்ள ஐ.நா. அகதிகளுக்கான தூதராலயத்தில் உள்ள

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவ வெற்றி கிட்டும் வரை அரசு சமாதான முயற்சியில் ஈடுபடாதாம்!

கொழும்பு, ஜூன் 15

கிழக்கில் இராணுவம் தனது முந்திய நிலைக்கு மீண்டு, வடக்கில் விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தும் வரையும் —

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் முயற்சிகள் எதிலும் அரசாங்கம் ஈடுபடமாட்டாது - என்று அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி "த ஐலண்ட்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியுடனும் ஏனைய கொழும்புத் தமிழ் அமைப்புகளுடன் இவ்வொரு சுற்றுப் பேச்சு இதுவரை நடத்தப்பட்ட போதிலும் -

கிழக்கில் இராணுவ அதிகாரத்தை முன்னரைப்போல முழுதாக நிலைநிறுத்தும் வரையும் அதன்பின்னர் வடக்கில் பெரும் எடுப்பிலான தாக்குதல்களை நடத்தி விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தும் வரையில் ஏனைய தமிழ்க் கட்சிகளுடனான பேச்சுக்களை நடத்துவதில்லை என்று அரசாங்கம் முடிவுசெய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் இராணுவ ஆதிக்கத்தை முழுதாக நிலைநாட்டும் வரை அமைதி திட்டம் எதனையும் காண்பது சாத்தியமற்றது என்று [illegible] (அ)

## பிரதேச சபை தலைவர் சுட்டுக் கொலை

கொழும்பு, ஜூன் 15

திருக்கோவில் பிரதேச சபைத் தலைவர் இராசலிங்கம் பத்மநாதன் (31 வயது) கடந்த ஞாயிற்றுக்கிழமை இனந் தெரியாத இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

தம்பிலுவில் கண்ணகி அம்மன் கோவில் ரதோற்சவத்தின் போது அங்கு வைத்து அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

[illegible] (உ-3)

## கண்டி எசலபெரஹராவை புலிகள் குழப்பக் கூடுமாம்

கொழும்பு, ஜூன் 15

இம்மாத இறுதியில் ஆரம்பமாகவிருக்கும் கண்டி எசல பெரஹராவைக் குழப்ப புலிகள் முயற்சிக்கக்கூடும் என்று பாதுகாப்புப் படையினர் சந்தேகப்படுவதாகவும்—

இதன் காரணமாக பெரஹரா வேளை தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வதற்காக நாலாயிரம் பொலீஸாரைக் கடமையில் ஈடுபடுத்த அரசு முடிவு செய்திருப்பதாகவும்—

கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தமிழ் அரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 15

கிறிஸ்தவ கலை இலக்கியத்தின் ஆதரவில் நவாலியில் இன்று முத்தமிழ் அரங்கு இடம் பெறுகிறது.

நவாலி தெற்கு, சின்னப்பா வீதி ''கலைவண்ணம்'' விசேட அரங்கில் சொற்பொழிவுகள், கவி அரங்கம், சிறுவர் நாடகம், மெல்லிசை, நாட்டுக்கூத்துப் பாடல்கள் என்பன பிற்பகல் தொடக்கம் நள்ளிரவு வரை தொடர்ந்து நடைபெற உள்ளன.

கவிஞர் பா. சத்தியசீலனின் பிறந்த நாளை முன்னிட்டு இந்த விசேட நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

(அ)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ் இந்துக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்கல் 10 மணிக்கு நடைபெறும். பிரதம விருந்தினராக வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலர் திரு. சு. டிவகலாலா கலந்து கொள்வார்.

அண்மையில் இஸ்ரேலில் பயிற்சி பெற்ற

# 20 இந்திய கொமாண்டோக்களை இலங்கைக்கு அனுப்ப வேண்டும்

### சுப்பிரமணிய சுவாமியின் மற்றொரு யோசனை

சென்னை ஜூன் 15

பிரபாகரனைப் பிடிப்பதற்கு அண்மையில் இஸ்ரேலில் பயிற்சி பெற்ற 20 இந்திய கொமாண்டோக்களை இலங்கைக்கு அனுப்ப வேண்டும்—என்று சுப்பிரமணிய சுவாமி புதிய ஆலோசனை ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்!

அண்மையில் இஸ்ரேலில் பயிற்சி பெற்றுத்திரும்பிய 200 பேரில் 54 பேர் தமிழர்கள் உள்ளனர் என்பதையும் அவர் நினைவுபடுத்தினார்.

இவ்வாறு தெரிவு செய்யப்படும் கொமாண்டோக்களுக்கு யாழ்ப்பாணப் பேச்சுமொழி வழக்கில் குறுகிய காலப்பயிற்சி ஒன்றை வழங்க வேண்டும்.

இவர்களை விமான மூலமாகவோ அல்லது கடல் வழியாகவோ வடக்கில், புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் இறக்கி அங்கிருந்து புலிகளின் பிரதேசத்தினுள் நுழைவதற்கு நடவடிக்கை எடுக்கமுடியும் என்றும்—

இந்தக் கட்டத்தில் இவர்களுக்கு உதவிபுரிவதற்கென இன்னொரு தரப்பினையும் நாம் தயார் செய்யவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் அகதி முகாமில் வசிக்கும், இந்தியாவுக்குச் சார்புடைய இலங்கை அகதி இளைஞர்களை இதற்கென தெரிவு செய்து வானொலி தொடர்பு சாதனங்களுடன் அவர்களை யாழ்ப்பாணத்திற்குள் ஊடுருவச் செய்யவேண்டும்.

இவர்கள் வானொலி சாதனங்களூடாக அங்கு இறக்கப்படும் வீரர்களுடன் பின்னர் தொடர்பை ஏற்படுத்தி பிரபாகரனின் நடமாட்டப் பிரதேசங்கள்பற்றிய தகவல்களை வழங்கமுடியும்—

இதற்கு இலங்கை அரசின் அங்கீகாரம் அவசியம் ஆகும். தற்போது அங்கு ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் இந்த அங்கீகாரத்தைப் பெறுவது கடினமாக இருக்காது என்றார் அவர்.

இஸ்ரேலில் பயிற்சி பெறுகின்ற வெளிநாட்டு கொமாண்டோக்களில் இந்தியர்களே சிறந்தவர்களாக விளங்குவதாக இஸ்ரேல் கூறுகிறது.

இந்தத் திறமையை உபயோகிக்கும் காலம் இப்போது வந்துள்ளது— என்று சுப்பிரமணியசுவாமி கூறியதாக சென்னைப் பத்திரிகை ஒன்றை மேற்கோள்காட்டி கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

[ஒ-14]

## தட்டச்சுப் பயிற்சி
(தமிழ் / ஆங்கிலம்)

ஆரம்பம்: 01 – 07 – 1995
விண்ணப்ப முடிவு திகதி; 23 – 06 – 1995
வார நாட்களில் நேரில் தொடர்பு கொள்ளவும்

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்,
வதிரி, கரவெட்டி.

[37081]

மோதல்கள் வெடித்தால்

## 2 ஆயிரம் குடும்பங்கள் வலி. வடக்கில் வெளியேறும்

வலி தெற்கு ஜூன் 15

இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே எதிர்காலத்தில் பெரும் மோதல்கள் வெடிக்குமாயின் – வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் இருந்து இரண்டாயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் இடம்பெயரலாம் எனவும்—

அவற்றை வலிகாமம் தெற்கு பிரதேச பகுதிகளில் குடியமர்த்தக் கூடியதாக அகதி முகாம்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் எனவும்—

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர்பிரிவில் நடைபெற்ற அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்தல் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கபட்டது.

உடுவில் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு பிரதேச செயலர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமை வகித்தார்.

வலிகாமம் தெற்கு பிரதேசத்தில் அகதி முகாம்கள் அமைப்பதற்கு வசதியாக பன்னிரண்டு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

காயப்பட்டோரை எடுத்துச்செல்ல செஞ்சிலுவைச் சங்கம், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும்—

முன்னர் இயங்கி, செயலிழந்துள்ள கிராமிய குழுக்களை மீண்டும் இயக்கி மக்களை காக்கும் ஒழுங்கை அவர்கள் மேற்கொள்ளச் செய்யவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. [ஒ-152]

# எமது மண்ணின் வளத்தைக் கட்டியெழுப்ப தம்மை அர்ப்பணித்த துணைவேந்தர்

### பேராசிரியர் துரைராஜாவுக்கு பாராட்டு

யாழ்ப்பாணம். ஜூன் 15

எமது மண்ணின் கல்வி பொருளாதார வளங்களைக் கட்டி யெழுப்பும் மகத்தான பணிக்கு தன்னை இறுதிவரை அர்ப்பணித்தவர் முன்னாள் துணைவேந்தர் துரைராஜா.

யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் துரைராஜாவின் முதலாவது ஆண்டு நினைவு தினத்தை யொட்டி யாழ். பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட நினைவுநாள் விழாவில் பேசிய தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் இவ்வாறு கூறினார்.

துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் தலைமையில் நடந்த 13 ஆம் திகதி கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற மேற்படி விழாவில் திரு இளங்குமரன் மேலும் பேசும் போது கூறியதாவது: துணைவேந்தர் என்ற வகையில் அவருக்குக் கிடைத்த பல்வேறுவசதிகளையும் தவிர்த்துவிட்டு சாதாரண மக்களுடன் தானும் ஒருவராக கலந்து அவர்கள் அனுபவித்த துன்ப துயரங்களை தானும் ஏற்று வாழ்ந்த அவரது உயர்ந்த பண்பு அவரை உலகப்புகழ் வாய்ந்த ஒருவராக உயர்த்தியது பல்கலைக்கழக மட்டத்திலன்றி சாதாரண மாணவர்களின் கல்வியிலும் அக்கறை செலுத்திய அவர் தந்தை செல்வநாயகம் போன்ற பெரியோர், சிறுவர்கள் என்ற பேதமின்றி எல்லோரையும் அணைத்து நடந்தவர் என்று கூறினார்.

பல்கலைக்கழக மாணவர் சார்பில் பேசிய செல்வன் நிஷாந்தன் பேசும் போது தேசத்தின் நல்ல குடிமகனாக, சிறந்த ஆசானாக, வழிகாட்டியாக விளங்கிய அவர் பெற்ற விருதுகள் ஏராளம் அவரால் விருதுகள் தமக்கு அங்கீகாரத்தைத் தேடிக் கொண்டன.

அவர் இந்தத் தேசத்திற்குக் கிடைத்த மிகப் பெரிய விருது இவ்வாறு அவர் கூறினார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், பல்கலைக்கழக பதிவாளர் திரு. எஸ். பரமேஸ்வரன், திரு க. குமாரதாஸ் திரு கே. ஆலாலசுந்தரம் திரு. சோமசுந்தரப்பிள்ளை, திரு செல்வரத்தினம் ஆகியோரும் பேசினார்கள் முன்னதாக துணைவேந்தர் குணரத்தினம் முன்னாள் துணைவேந்தரின் உருவப்படத்திற்கு பலர்மாலை அணிவித்து மங்கள விளக்கேற்றினர்.

(க-11)

## செப்ரிசீமியா; சிறுமி மரணம்

யாழ்ப்பாணம். ஜூன் 15

செப்ரிசீமியாவினால் பீடிக்கப்பட்ட விஜயரட்ணம் ஷர்மினி என்ற 3 வயதுச் சிறுமி கடந்த திங்கட்கிழமை யாழ் வைத்தியசாலையில் மரணமானார்.

காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த இவர் கடந்த ஒரு மாத காலமாக யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். [ஒ-1 ]

# பாதுகாப்பு நடைமுறை பற்றி கதிர்காமத்தில் கருத்தரங்கு

### பொலீஸார் நடத்தினர்

கொழும்பு. ஜூன் 15

யாத்திரிகர்களுக்கு அறைகளை வாடகைக்கு விடும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் பற்றிய கருத்தரங்கு ஒன்றை கதிர்காமப் பகுதி பொலீஸார் அண்மையில் நடத்தியுள்ளனர்.

இந்தக் கருத்தரங்கிற்கு கதிர்காமம் பகுதியிலுள்ள அரச மற்றும் தனியார் விருந்தினர் மற்றும் ஓய்வு விடுதிகளின் [illegible] உரிமையாளர்கள், விடுதிகள் [illegible] உரிமையாளர்கள், யாத்திரிகர்களுக்கான [illegible] உரிமையாளர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர். [ஐ-5]

## நல்லாசிரியர் விருது

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் அங்கமான ஆசிரிய வாண்மை விருத்திக் குழு ''விளக்கு'' சஞ்சிகையின் சார்பில் நல்லாசிரியர்களைத் தெரிவு செய்து விருது வழங்கிக் கௌரவிக்கத் தீர்மானித்திருக்கும் விடயம் யாவரும் அறிந்ததே.

யாழ் மாவட்டத்தில் மூவரையும், வட தமிழீழப் பெரு நிலப்பரப்பில் மூவரையும் சிறந்த ஆசிரியர்களாகத் தெரிவுசெய்து அவர்களுக்கு 'நல்லாசிரியர் விருது' வழங்கிக் கௌரவிப்பதோடு அவர்களுள் முதலிடம் பெறுவோருக்கு தங்கப்பதக்கமும், ரூபா ஐயாயிரமும், இரண்டாம் இடம் பெறுவோருக்கு வெள்ளிப்பதக்கமும், ரூபா மூவாயிரமும், மூன்றாம் இடம்பெறுவோருக்கு வெண்கலப்பதக்கமும், ரூபா இரண்டாயிரமும் வழங்க ''விளக்கு'' சஞ்சிகை முன்வந்துள்ளது.

இவ்விருதைப் பெறுவதற்கு முற்றிலும் தகுதியுடையவர் எனத் தாம் கருதும் ஆசிரியர் சம்பந்தமான விவரங்களை தற்போது வெளிவந்துள்ள ''விளக்கு'' சஞ்சிகையின் பங்குனி – சித்திரை இதழில் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தில் தெளிவாகக் குறித்து தனித்தனியாக அனுப்பும்படி அதிபர்கள், ஆசிரியர்கள் போன்றோரையும்; ஆசிரியர் கழகம், மாணவர் மன்றம், பழைய மாணவர் மன்றம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், இலக்கிய மன்றம் போன்ற பொதுப் பணி அமைப்புக்களையும் ''விளக்கு'' வேண்டிக்கொள்கிறது.


விண்ணப்பங்களும், விதந்துரைகளும் கிடைக்க வேண்டிய இறுதித் திகதி 30 - 6 - 95 ஆகும். விண்ணப்படிவம் இணைக்கப்பட்டுள்ள சஞ்சிகையைப் பாடசாலைகளிலும், புத்தகக்கடைகளிலும், தமிழீழக் கல்விக் கழகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்த ஆண்டு பரீட்சார்த்தமாக நடைபெறவுள்ள இத்தெரிவு வெற்றிபெறும் பட்சத்தில் அடுத்து வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து நடத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

ஆசிரியர் வாண்மை
அபிவிருத்திக்குழு,
தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை.

[சி-1492]

## 41-ம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 10 – 10 – 1933 | 06 – 05 – 1995 |

### அமரர் மாரிமுத்து ஐயாத்துரை
[ஓய்வு பெற்ற தலைமை புகையிரத பாதுகாவலர்]

எங்கள் குடும்பத் தலைவரின் மறைவை அறிந்து எமது வீட்டிற்கு வந்து எமக்கு ஆறுதல் அளித்த அனைவருக்கும், கொழும்பில் நடந்த ஈமச்சடங்குகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இன்று (15-06-95) வியாழக்கிழமை நடைபெறும் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
உறவினர்.

55, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். (37080)

# தமிழரை தாக்கியது யார் என்பது விரைவில் தெரியும்

### காலியில் அமைச்சர் பத்திரன

கொழும்பு, ஜூன் 15

காலியில் தமிழர்களைத் தாக்கியது யார் எனக் கண்டறிவதற்காக இரகசியப் பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். யார் தாக்கினார்கள் என்பது விரைவில் தெரியவரும் என அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன தெரிவித்தார்.

காலியில் சமாதான கூட்டம் ஒன்றில் கலந்துகொண்ட அமைச்சர் இதனை தெரிவித்தார்.

காலியில் மூவினப் பிரதிநிதிகளைக் கொண்ட சமாதானக் குழு ஒன்றை அமைக்க ஒழுங்கு செய்த அமைச்சர் மீண்டும் ஒருவன் செயலுக்கு இனிமேல் இடமளிக்கப்படமாட்டாது எனவும்—

தமிழ்மக்களுக்கு தகுந்த பாதுகாப்பும், அண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடும் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

(ஒ-14)

திருமண வைபவத்துக்கு வந்த

## தமிழக வாசி ஒருவர் அக்குரஸ்ஸவில் கைது

திருமண வைபவம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக தமிழ் நாட்டிலிருந்து வந்திருந்த நபர் ஒருவரை அக்குரஸ்ஸ பொலீஸார் கைது செய்துள்ளனர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்தவரான ரெல்கசாமி கருப்பையன் எனபவரே கைது செய்யப்பட்டவர் ஆவார்.

இவருடன் சென்ற வேறு இருவரும் கைது செய்யப்பட்டனர்.

(ஒ-14)

# பாடசாலை ஆசிரியர்களுக்கு தொழில் முன்னிலை திட்டம்

### கல்வி அமைச்சு அறிமுகப்படுத்தும்

கொழும்பு, ஜூன் 15

பாடசாலை ஆசிரியர்களுக்கான தொழில் முன்னிலைத் திட்டம் ஒன்று கல்வி அமைச்சினால் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இந்தப் புதிய திட்டம் பிரதேச கல்வி அலுவலகங்கள் ஊடாக அறிமுகப் படுத்தப்படும் என்று கல்வி அமைச்சர் றிச்சட்பத்திரன தெரிவித்தார்.

பத்தேகம கல்விப் பிரிவிலுள்ள ஸ்ரீ றட்ணசார வித்தியாலயத்தில் நடைபெற்ற விஞ்ஞான கணித கண்காட்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

பலப்பிட்டிய, கிரக்ம உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் இது தொடர்பான 2 வருட பயிற்சித் திட்டம் இந்தமாதஇறுதியளவில் ஆரம்பிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார், [ஐ-5-4)

உணவுப் பொருள்களுடன்

## மன்னார் சென்ற படகு இடையில் நீரில் மூழ்கியது

யாழ்ப்பாணம், ஜூன் 15

கற்பிட்டியில் இருந்து அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு மன்னார் சென்றுகொண்டிருந்த படகு ஒன்று கடும் காற்றுக் காரணமாக நீரில் மூழ்கியது.

கடந்த வெள்ளிக்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றது. படகில் இருந்த நால்வர் நீந்திக் கரை சேர்ந்தனர்.

மன்னாரில் கடும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது கடற்படையினரின் பாதுகாப்புடன் தனியார் படகுகள் மூலம் அங்கு உணவுப்பொருள்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன.

இவ்வாறு உணவுப்பொருள்களை ஏற்றிச்சென்ற படகே கடலில் மூழ்கியது.

தற்போது கடும் காற்று வீசுவதால் தனியார் படகுச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. (ஐ)

## நன்றி நவிலல்



### திருமதி நாகம்மா கனகராசா

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 30 – 06 – 1930 | 02 – 06 – 1995 |

எம் வாழ்க்கைத் துணைவியார் திருமதி நாகம்மா கனகராசா அவர்கள் இறைபதம் சேர்ந்தது அறிந்து எம் இல்லம் நாடி வந்தும், எம்மைத் தேற்றியும் ஈமக்கிரியைகள், இறுதி யாத்திரை, தகனம் ஆகியவற்றிற்கான அனைத்து ஒழுங்குகளையும் மேற்கொள்வதில் முனைப்பாகச் செயற்பட்டும் தங்கள், தங்கள் உள்ளத்துணர்வுகளை அச்சிட்டு விநியோகித்தும், இரங்கலுரைகள் மூலம் வெளிப்படுத்தியும், மலர்வளையங்கள் அனுப்பியும் கலந்து சிறப்பித்தும் உதவிய அன்புப் பெருமக்களுக்கும், நாளும் எம் இல்லம் வந்து துக்கம் தெரிவித்துச் செலும் அன்பர்களுக்கும் எமது நன்றி. அன்பு வணக்கம்.

— கலாநிதி க. கனகராசா.

''இருஆலவாய்''
525/2 கே கே எஸ். வீதி,
யாழ்ப்பாணம் (சி/1495)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ தயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## தள நிலைமை மாற வேண்டும்

அம்பாறை மாவட்டத்தில் அரசாங்கப் படைகளின் கெடுபிடிகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு எல்லா வகைகளாலும், வழிகளாலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் மட்டுமன்றி கிழக்கு முழுவதிலுமே தமிழர்களை அழித்து, அடிமைப்படுத்தும் நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

கிழக்கு வாழ் தமிழ் மக்கள் கேட்டுக் கேள்வி இன்றி, காரண காரியம் இன்றி அரசாங்கப் படைகளால் காலத்துக்குக் காலம் கொன்றொழிக்கப்படுவது சர்வசாதாரணமாகி விட்டது.

கடந்த பன்னிரண்டு வருட காலத்தில் தனது குடும்ப அங்கத்தவர் ஒருவரையாவது இழக்காத தமிழர் குடும்பங்களை கிழக்கில் கண்டுபிடிப்பது மிகவும் கடினமான காரியம். தந்தையை இழந்த பிள்ளைகள், மகனை அல்லது மகளை இழந்த பெற்றோர் என்ற நிலை வீட்டுக்கு வீடு வாசற்படி போன்ற பரிதாபக் கதைகளே அங்கு ஏராளம்!

இராணுவ ஆதிக்கத்தினால், வடக்கில் வாழும் எமக்கும் பேரிழப்புகள் ஏற்பட்டன என்பது மறக்க முடியாததுதான். ஆனால் கிழக்கே சென்று, அங்குள்ள கிராமப் புறங்களுக்குப் போனால், ஒவ்வொரு தமிழ்க் குடும்பமும் இராணுவப் படுகொலைகளால் ஆகக்குறைந்தது ஓர் அங்கத்தவரையாவது இழந்த சோகக் கதைகளையே கேட்க முடியும். இராணுவ அட்டூழியம் நேரடியாக எவ்வாறு கோரத்தாண்டவம் ஆடுகின்றது என்பதை உணரமுடியும். அப்போது எம்மை அறியாமலே ஓர் ஆத்திர உணர்வும், இராணுவத்தை அங்கிருந்து உயிரைக் கொடுத்தும் விரட்டிவிட வேண்டும் என்ற ஓர்மமும் மனதில் தீ போலக் கொழுந்துவிடும்— என்று கிழக்கைப்பற்றி நன்கறிந்த அன்பர் ஒருவர் அண்மையில் குறிப்பிட்டார்.

கிழக்கு வாழ் தமிழர்களுக்கு உயிர்ப் பாதுகாப்பு இல்லை. அங்கிருந்து இராணுவத்தை விரட்டும் வரைக்கும் அந்த நிலைமை நீடிக்கப்போகிறது என்பது கசப்பான உண்மை.

அது ஒரு புறமிருக்க, அவர்களின் நாளாந்த வாழ்க்கையும் பெரிய அளவில் பாதிப்புற்றிருக்கிறது. கிழக்கில் அமைதி நிலவுகிறது; இயல்பு வாழ்க்கை குந்தகம் எதுவுமின்றி நடக்கிறது; என்று ஈழப்போர் இரண்டு ஆரம்பித்த 1990ஆம் ஆண்டிலிருந்தே சிங்கள அரசாங்கங்கள் பொய்ப்பிரசாரம் செய்து வருகின்றன. ஆனால் கிழக்குத் தமிழ் மக்கள் இராணுவ ஆதிக்கத்துக்கு மட்டுமன்றி இராணுவ ஆட்சிக்கும் உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதே யதார்த்தம்!

ஈழப்போர் மூன்று கிழக்கிலேயே இப்போதைக்கு பெரியளவில் மூண்டிருக்கிறது. விடுதலைப்புலிகளின் தாக்குதல்களில் நாளாந்தம் படையினர் மடிந்து வருவதால், பாதுகாப்புக் காரணங்கள் என்ற பெயரில், தமிழர்கள் மேன்மேலும் இம்சிக்கப்படுவார்கள் என்பது எதிர்பார்க்கப்பட வேண்டியதே.

தமிழ் மக்களின் நடமாட்டத்துக்குக் கட்டுப்பாடு; தொழில் செய்வதற்கு கட்டுப்பாடு; என்று பலவகைத் தொல்லைகளையும் கொடுத்து அவர்களின் நாளாந்த வாழ்க்கையைச் சீர்கெடுத்தி துன்பம் விளைவிப்பதில், அவர்களை நிர்க்கதிக்குள்ளாக்குவதில் இராணுவம் இன்பம் காண்கின்றது.

இந்த நிலை ஒழிக்கப்பட வேண்டுமானால், கிழக்கிலிருந்து இராணுவம் விரட்டப்பட வேண்டியது அவசியம். ஆகக் குறைந்தது சிறு சிறு இராணுவ முகாம்கள் நிர்மூலமாக்கப்பட்டும், பெரியமுகாம்களுக்குள் துருப்புக்கள் முடக்கப்பட்டதுமான ஓர் தள நிலையாவது எய்தப்பட வேண்டும். விடுதலைப் புலிகளின் இப்போதைய தாக்குதல்கள் இந்த நிலைக்கு விரைவில் இட்டுச் செல்லும் என நம்புவோமாக. அப்போது தான் கிழக்குத் தமிழர்கள் சிறிதளவேனும் சராசரி வாழ்க்கையைப் பற்றி எண்ணிப் பார்க்க முடியும்.

### அரசியல் தீர்வுத் திட்டம் ஏதும் எழுத்தில் இல்லை:

# அரசுக்கு தமிழ்க் கட்சிகள் வழங்கி வரும் ஆதரவை உடன் வாபஸ் பெற வேண்டும்

## குமாரின் அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

பொ.ஐ.மு. அரசுக்கு நாடாளுமன்றத்தில் ஆதரவளித்து வரும் தமிழ்க்கட்சிகள் அந்த ஆதரவை உடனடியாக விலக்குவதுடன், அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக் குழுவையும் பகிஷ்கரிக்க வேண்டும்

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பொதுச்செயலாளர் திரு குமார் பொன்னம்பலம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழர் பிரச்சினை தொடர்பாக அரசிடம் அரசியல் தீர்வுத் திட்டம் எதுவுமே எழுத்தில் இல்லை.

அரசு முன்னர் தெரிவித்த கருத்துக்களில் இருந்து மாறான கருத்துக்களை தற்போது தெரிவிக்கின்றது.

தரை, கடல், ஆகாயம் ஆகியவற்றில் தமது ஆதிக்கத்தை நிலை நாட்டிய பின்னர், ஒரு பலமான அந்தஸ்தில் இருந்து கொண்டே, அதிகாரப்பரவலாக்கம்பற்றிய திட்டம் எதனையும் முன்வைப்பது என்ற நிலைப்பாடு, விடுதலைப் புலிகளையும், தமிழர்களையும் ஒன்றாக சமப்படுத்த அரசு நோக்குவதையே புலப்படுத்துகிறது.

தெற்கில் கருத்தொருமிப்பு இருக்க வேண்டும் என்ற அரசின் கூற்று, தமிழர்களின் அபிலாஷைகள் பற்றி அரசுக்கு அக்கறை இல்லை என்பதையும் தமிழர் பிரச்சினை என்ற ஒன்று இல்லை; இருப்பதெல்லாம் பயங்கரவாதப் பிரச்சினையே— என்ற சிங்கள இனவாதிகளை சாந்தப்படுத்தும் ஒரு முயற்சியே.

எனவே தமிழ்க் கட்சிகள் அரசுக்கான தமது ஆதரவை விலக்குவதுடன், நாடாளுமன்ற தெரிவுக்குழுவையும் பகிஷ்கரிக்க வேண்டும்.

ஏனெனில், இத்தெரிவுக் குழுவானது தமிழர்களைப் பொறுத்தவரை அர்த்தமற்ற ஒன்றாகி விட்டது இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ஒ-5)

### இலங்கைக் கடலுக்கு அருகே

## ஜப்பானிய யுத்தக் கப்பல் அதிகாரியை காணவில்லை!

### இந்தியா, அமெரிக்கா தேடுகின்றன

கொழும்பு, ஜூன் 15

ஜப்பானிய யுத்தக் கப்பல் ஒன்றின் இடைநிலை அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் இலங்கைக்கு அருகே உள்ள கடற்பரப்பில் காணாமற் போயுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

காஷிமா என்ற யுத்தக் கப்பலில் பணிபுரியும் யுக்கியோ வக்காபயாஷி என்ற மாலுமியே காணாமற் போயுள்ளார் என புதுடில்லியிலுள்ள ஜப்பானிய தூதரகம் அறிவித்துள்ளது.

காணாமற்போய் விட்ட அந்த மாலுமியை தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் இந்திய, அமெரிக்க யுத்தக் கப்பல்கள் ஈடுபட்டுள்ளன.

இலங்கைக்கு தெற்கே 75 கிலோ மீற்றர் தொலைவில் இவர் காணாமற் போயுள்ளார். (ஒ-14)

## 'லங்கா முடித' கப்பல் இன்று வடக்கு நோக்கி புறப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 15

இடம்பெயர்ந்தவர்களுக்கான ஒரு தொகுதி உலர் உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு, 'லங்கா முடித' கப்பல் இன்று வியாழக்கிழமை கொழும்பு துறைமுகத்திலிருந்து வடபகுதி நோக்கி புறப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, "குமண" "மாஹோ" ஆகிய இரு கப்பல்களும் தொடர்ந்து துறைமுகத்துக்கு வெளியே காத்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ-4)

# தலைநகரில் அலையும் ஆதரவற்ற சிறுவர்கள்

## நாளாந்தம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 15

கவனிப்பாரற்று அலைந்து திரியும் சிறுவர்களின் எண்ணிக்கை கொழும்பில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக சமூகவியல் மானிடவியல் போதனா பீடத்தினர் மேற்கொண்ட ஆய்வொன்றில் இருந்து இத்தகவல் வெளிவந்தது.

கொழும்பு மாநகர பகுதியில் மட்டும் சுமார் 3 ஆயிரம் அநாதரவான பிள்ளைகள் உள்ளனர்.

ருகுணுகொடையில் சுமார் 150 பிள்ளைகள் இவ்வாறான நிலையில் திரிகின்றனர்.

இவர்கள் 4 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்டவர்களாவர்.

இவர்களில் 3 சதவீதத்தினர் பெண்கள்

அலைந்து திரியும் இச்சிறார்களின் அநேகர் துர்நடத்தையில் பலவந்தமாக ஈடுபடுத்தப்படுகின்றார்கள்.

வருடாந்தம் சுமார் 100 பிள்ளைகளாவது பெற்றோரை இழந்தோ அல்லது பெற்றோரால் கைவிடப்பட்டோ அநாதரவான நிலைக்கு ஆளாகின்றனர்.

இவ்வாறு அந்த ஆய்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. [ஐ 5-4]

## சாப்பாட்டு பந்தியில் பெண் மரணம்

தென்மராட்சி, ஜூன் 15

திருமண வீட்டில் சாப்பாட்டுப் பந்தியில் அமர்ந்த குடும்ப மாது ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து மரணமான சம்பவம் கடந்த திங்கள் வடமராட்சி கிழக்கு வத்திராயனில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த தனபாலு தவமலர் [வயது 43] என்னும் ஐந்து பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு மரணமானவர் ஆவார்.

### எழுதுவினைஞர், தொலைக்கல்வி

## பரீட்சை வினாத்தாள்கள் கப்பலில் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஜூன் 15

எதிர்வரும் 17 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள எழுதுவினைஞர் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய வினாத்தாள்களும்—

எதிர்வரும் 26 ஆம் 27 ஆம் 1 ஆம் 2 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள தொலைக்கல்வி ஆசிரியர்களுக்கான பரீட்சை வினாத்தாள்களும்— செவ்வாய் காலை யாழ் கல்வித் திணைக்களம் வலயம் ஒன்றுக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

செவ்வாய்காலைபருத்தித்துறைக்கு வந்த 'ஹபறண' கப்பலில் வினாத்தாள்களை யாழ், கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த ஒருவர் தம்முடன் கூடவே எடுத்து வந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தொலைக்கல்வி பயிற்சி நெறி இறுதிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கல்வித்திணைக்களத்துக்கு வந்து சேர்ந்துள்ளன என்றும்—

வலயம் 1, வலயம் 2, ஐச் சேர்ந்த சிரேஷ்ட போதனாசிரியர்கள் கல்வித் திணைக்களம் வலயம் ஒன்றுக்கு வந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. [ஒ-4]

## வயதெல்லை பாராது வருமின்!

ஈழத்து சிதம்பரத்தில்
ஏற்றமுறு மார்கழியில்
தோழர்கள் பலர் கூடித்
தொட்டு வடம் பிடித்து
தேரிழுத்தோம்; அந்தத்
தொன்மை நிகழ்வுகளை
தொடர்ந்து காண்பதெப்போ?

காவடி எடுத்தாடி
கற்பூரச்சட்டி ஏந்தி
மாவைக்கு வருவதெப்போ
மலர் தூவி தொழுவதெப்போ
வேலவா...!
வேளை எடுப்பதெப்போ
வினைரை களைவதெப்போ
தானை பண்வதெப்போ
தமிழருக்கு அருள்வதெப்போ?

சந்நிதிக் கந்தனிடம்
சனங்கள் செல்வதில்லை
அன்னியன் அங்கிருகினிலே
அடி தொழ வழியுமில்லை
பண்ணிய பாவம் தீர
பல திசை மக்கள் கூடி
சென்னியில் வேலைப் பாய்ச்சி
செய்திடும் நேர்த்தி எங்கே?

இப்படி எத்தனை கோயில் தலங்கள்
பூசைகள் இன்றிப் பூட்டிக் கிடக்குது
திறந்திருப்பவை மீதும் ஷெல்லும் குண்டும்
வீசி அழிக்குது மதவெறி அரசு
வடக்கு-கிழக்கை பௌத்த நாடாக்க
இதுவும் ஒரு திட்டம் — இனியும் நாம்
வெறுமனே எமக்குள் பேசாது எல்லோரும்
ஓரணி திரண்டு உலகுக்குச் சொல்வோம்
மத சுதந்திரம் அழிகிறதென்று
வயதெல்லை பாராது வருமின், திரண்மின்!

— காரை. எம். பி. அருளானந்தன்.

## புலிகளை வெல்ல முடியாது என ஜெரி கூறவில்லையாம்

கொழும்பு, ஜூன் 15

விடுதலைப் புலிகளை வெல்ல முடியாது என்று தாம் கூறவில்லை என்றும்—

இராணுவத் தீர்வை நாடாமல் அரசியல் தீர்வையே தேட வேண்டும் என்று தான் தெரிவிக்கவில்லை என்றும் —

இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளை வெல்ல முடியாது என்று இராணுவத் தளபதி கூறியதாக அண்மையில் அநுரா பண்டாரநாயக்கா நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் விதத்திலேயே இராணுவத் தளபதி அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

[illegible] பாதுகாப்பு [illegible] இராணுவத் தளபதி [illegible] பேட்டி ஒன்றை வழங்கினார்.

அது குறித்து அநுரா பண்டாரநாயக்கா இப்போது சர்ச்சை கிளப்பியுள்ளார்

விடுதலைப் புலிகளை வெல்லக் கூடிய ஆட்பலம், போர்த்திறமை அர்ப்பணம் படைகளுக்கு இருப்பதாக இராணுவத் தளபதி தமது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார். [ஆ]

### யாழ். மாநகர சபை

## அனர்த்தங்கள் ஏற்படின் முகம் கொடுக்கத் தயார்

யாழ்ப்பாணம், ஜூன் 15

இராணுவ நடவடிக்கைகளால் யாழ் நகரில் ஏற்படக்கூடிய பெரும் அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பதற்கு யாழ் மாநகரசபையும் தயாராகி வருகின்றது.

இதன் முதல் கட்டமாக மண்எண்ணெய் பரல்களில் அமைக்கப்பட்ட 100 தண்ணீர்த் தாங்கிகளையும், மரப்பலகையில் மாபிள்பேசின்களால் அமைக்கப்பட்ட 50 மலசல கூடங்களையும் யாழ். மாநகரசபை அதன் வேலைத்தளத்தில் செய்து வருகிறது.

இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயரும் மக்களின் உடனடி அத்தியாவசிய தேவைகளைக் கவனிப்பதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையே இதுவெனத் தெரிவிக்கப்படுகிறது.

## புலிகளின் குரல் வானொலியில்

15 – 06 – 1995

வியாழன் இரவு

★ 8-02 — சொல்லுங்கள் பார்க்கலாம்
★ 8-10 — நோய் தீர்க்கும் மூலிகைகள்
★ 8-20 — உழைப்போம் உயர்வோம் நாம் தமிழ் நிறுவனம் உதவிய தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் - சித்திரம்.
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — மொழியும் வாழ்வும்
★ 8-50 — எங்கள் தேசம்.

16 — 06 — 1995

வெள்ளி காலை

★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15 — மணியாரம்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப்பாடல்கள்

## தமிழீழ வானொலியில்

15 — 06 — 1995

வியாழன் மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக் கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — மழலைகளுக்காக
★ 5-30 — இசையும் கதையும்
★ 6-00 — சிந்தனைக்கு சில விநாடிகள்
★ 6-02 — பொன் விளையும் பூமி
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-25 — விளையாட்டுத் தொடர்பான கேள்வி - பதில்

## கலந்துரையாடல்

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு ஏற்பாடு செய்துள்ள இணைக்கப்பட்ட பல்கலைக்கழக கல்லூரி மாணவர்களுடனான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கலை வர்த்தகக் கல்லூரியில் நடைபெறும்.

அனைத்து பல்கலைக்கழகக் கல்லூரி மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது [ஒ-14]

★ ★ ★

யாழ் பிராந்திய சுகாதாரத் திணைக்களமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள சுகாதார சேவை வசதிகள் பற்றிய மீளாய்வுக்கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பிராந்திய பிரதி நாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறும். (ஒ-4]

## தமிழ் விழா

யாழ்ப்பாணம், ஜூன் 15

வைத்தீஸ்வரக் கல்லூரியின் தமிழ்ப் பேரவை நடத்தும் தமிழ் விழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு விவேகானந்தா மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். மருத்துவபீட சமுதாய மருத்துவத்துறையின் வைத்திய கலாநிதி சு. நச்சினார்க்கினியன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (ஒ-14)

## நாடக அரங்கியல் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 15

திருமறைக் கலாமன்றம் ஒழுங்கு செய்துள்ள நாடக அரங்கியல் கண்காட்சி இன்று வியாழக்கிழமை முதல் 18 ஆம் திகதி வரை தொடர்ந்து 4 நாட்களுக்கு நடைபெறும்

தினமும் காலை 9மணி முதல் மாலை 5-30 மணி வரை கண்காட்சியும் மாலை 6-45 மணிமுதல் இரவு 10 மணி வரை நடன நாடக நிகழ்ச்சிகளும் இடம்பெறும்

18 ஆம் திகதி காலை 9மணி முதல் நண்பகல் 12-30 மணி வரை நாடகக் கருத்தரங்கு இடம்பெறும். (ஒ-14)

## ஆய்வுப் பட்டறை

யாழ்ப்பாணம், ஜூன் 15

தற்போதுள்ள சூழ்நிலையில் குடாநாட்டில் ஓர் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுமேயானால் அதனால் எழக்கூடிய நெருக்கடியையும் பாதிப்புக்களையும் எந்தவகையில் நாம் சமாளிக்கலாம் என்பது குறித்து அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் இணைந்து ஒரு திட்டமிடலுக்கான ஆய்வுப் பட்டறையை நடத்தவுள்ளன.

"அனர்த்தங்களின் போதான தயார்ப்படுத்தலும் அவற்றிற்கான நடைமுறைகளும்" என்ற இவ்வாய்வுப்பட்டறை எதிர்வரும் 17ஆம், 18 ஆம் திகதிகளில் கொக்குவில் அமைந்துள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. [ஒ]

## திருமலையில் தமிழர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஜூன் 15

திருகோணமலை இலங்கைத் துறைமுகத்துவாரம் பகுதியை நேற்று முன்தினம் சுற்றிவளைத்த படையினர் அப்பாவி தமிழர் ஒருவரைச் சுட்டுக் கொன்றனர்.

3 பிள்ளைகளின் தந்தையான வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம் [39 வயது] என்பவரே கொல்லப்பட்டவர் ஆவார். [ஓ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனை

வெளிவந்துள்ளது A/L இரசாயனவியல் பகுதி I ஆசிரியர்: க. சொக்கலிங்கம் M. A. விற்பனையாளர், சிறீ சுப்பிரமணியம், பொத்தக சாலை, 235, காங்கேசன்துறை சாலை யாழ்ப்பாணம். [37070]

### வீடு விற்பனைக்கு

நல்லைமார்க்கட்டு வைத்திய சாலைக்கு அண்மையில், செம்மணி வீதியில் ஐந்து பரப்பு காணியும், வீடும் விற்பனைக்குண்டு. விபரம் : இல. 82, செம்மணி வீதி, நல்லூர்மார்க்கட்டு [37078]

### மயூரத் வெளியீடுகள்

ஆசிரியர் சச்சிதானந்தனின் ஆக்கங்களான கணிதம் ஆண்டு 7, ஆண்டு 8, ஆண்டு 9 விற்பனையாகின்றன. சிறந்த கணித நூல்களுக்கு மயூரதி வெளியீடுகள், பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, ஸ்ரீ ஆனந்தா, யாழ். புத்தக நிலையம், மதி, தனலக்ஷமி, ஸ்ரீகாந்தா ஆகிய இடங்களில் கிடைக்கும். [8419]

### தேவை

குரக்கன் தேவை. தொடர்பு: அண்ணா பாம், மருதனார்மடம், இணுவில். [சி/1447]

### SPECIAL ANIENNA

To view Rupavahini, Madras Programmes Fixing Spcial T V Antenna Repaireing Antennas Radios- T. V Decks Clocks and Watches Venus Dilka Watch and Radio Works, 284 Stanley Road (Ariyakulam Junction Jaffna. Branch: Kandy Road Chavakachcheri. (C-1490)

### வாடகைக்கு

யாழ் நகரப் பகுதியில் அடிப்படை வசதியுள்ள தனியான சிறிய வீடு வாடகைக்கு உண்டு. இரண்டு பேருள்ள வயதான குடும்பத்திற்கு மட்டும் கொடுக்கப்படும். தொடர்பு: இல. 803, பே/பா உதயன், யாழ்ப்பாணம். (37072)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் துரை

நவாலி கிழக்கைச் சேர்ந்த மெக்கானிக் பொன்னம்பலம் - துரை நேற்று (14-6-95) காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும், வடிவேல் குலராணி, குலராசா (ஜேர்மனி), குலநாயகம் (இ. போ. ச. யாழ் சாலை), சிவஞானம் (ஆசிரியர் பெமோறியல் கல்லூரி), அடைக்கலநாயகம் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஆ. வடிவேல், திருமதி அருள்ராணி குலராசா, திருமதி கலாவதி குலநாயகம் (ஆசிரியை சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி), திருமதி அம்பிகை சிவஞானம் (ஆசிரியை / துளவாலை கன்னியர்மடம்), திருமதி கலைவாசனி அருமைநாயகம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், தயாசங்கர், சுகந்தி, மோகனாம்பிகை, அஜந்தன், கோபிநாத், இலக்சன், சோபனா, பிரசாத் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் மானிப்பாய் தெற்கு அதிகாரி செல்லமுத்துவீதியில் திருமதி வடிவேலு குலராணியின் இல்லத்தில் (15-6-95) இன்று வியாழன் காலை 11 மணியளவில் நடைபெற்று நவாலி கொத்தக்கட்டி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
து. குலநாயகம்
(மகன்)

அதிகாரி செல்லமுத்து வீதி,
மானிப்பாய் தெற்கு. (37084)

### துரைராசா மகேந்திரன்
[ஜீட்]

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பிரான்ஸில் வசித்தவருமான துரைராசா மகேந்திரன் 11-06-95 அன்று பிரான்சில் காலமானார்.

இவர் துரைராசா கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகேந்திரம் மகாலட்சுமி (பிரான்ஸ்) தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற அம்பலவாணர் - ஆச்சிக்குட்டி தம்பதியினரின் பேரனும் கமலதேவியின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும் லக்ஷிகாந்தின் (பிரான்ஸ்) அன்புத் தந்தையும், பாலேந்திரன், தெய்வேந்திரன் [சுவிஸ்], இந்திராணி (சுவிஸ்), தேவராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திராதேவி (சுவிஸ்), சாரதாதேவி, இலத்தின்மதவி [சுவிஸ்] ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சி. சிதம்பரநாதன்
(சிறியதகப்பன்)

12, 6ம் ஒழுங்கை,
டலி வீதி,
யாழ்ப்பாணம். (37083)

### சண்முகநாதன், செல்வராசா
[Foreman - வடபிராந்திய போக்குவரத்துசபை கோண்டாவில்]

இணுவிலைச் சேர்ந்த சண்முகநாதன் செல்வராசா (14-6-95) நேற்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற சண்முகநாதன் லட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் திருமதி றோஸ்பேரியலின் அன்புக் கணவரும், சாம் தவச்செல்வம், யோன் சாமுட் செல்வம், டானியல் கமலச்செல்வம், அன்ரன் சுபீந்திர செல்வம், லக்சன் ஜெக்கப் ஆகியோரின் அன்பு தந்தையுமாவார்.

நல்லடக்கம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் தென்னிந்திய திருச்சபை உடுவில் சேமக்காலையில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகன்

இணுவில் தியேட்டர் ஒழுங்கை,
இணுவில். [37085]

## ஆலயங்களில்

சித்தன்கேணி மகா கணபதிப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை சங்காபிஷேகம் நடைபெறும். (உ-135)

★ ★ ★

சுழிபுரம் பறாளை சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் நாளை கந்தரநுபூதி பரிசளிப்பு விழா நடைபெறும். வருடா வருடம் நிலையக்குரல் ஆதரவில் கந்தரநுபூதி மனனம் செய்விக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்தொடரில் இவ்வருடம் பரிசுக்குத் தெரிவு செய்யப்பட்ட 30 பேருக்கு பிரம்மஸ்ரீ சு. சண்முகரத்தின சர்மா பரிசுகளை வழங்குவார். (உ-28)

★ ★ ★

அபிராமியந்தாதி 55 ஆவது, 56 ஆவது செய்யுள்களின் ஆய்வுரை வெளியீடு நாளை மாலை வழக்கம்பரை அம்மன் கோவிலில் நடைபெறும். இத்தொடர் வெளியீட்டை வழக்கம்பரை பஜனைச் சபையினர் நடாத்தி வருகின்றனர். (உ-28)

## பணிப்பாளருடன் தொடர்பு கொள்க!

யாழ்ப்பாணம், ஜூன் 15

எதிர்வரும் சனியன்று நடைபெறவுள்ள பொது எழுதுவினைஞருக்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றும் வெளி மாவட்டத்திற்கு விண்ணப்பித்த — விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இதுவரை கிடைக்கப் பெறாவிடின் யாழ்ப்பாணம் வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு பரீட்சை ஆணையாளர் கொழும்பிலிருந்து நேற்று அறிவித்துளளார். (உ-4)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் ஜூன் 15

எதிர்வரும் 24 ஆம் திகதி கொழும்பில் நடைபெற இருந்த இலங்கை நிர்வாக சேவைக்கான திறந்த போட்டிப் பரீட்சை காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் கொழும்பிலிருந்து நேற்று யாழ். செயலகத்திற்கு அறிவித்துள்ளார். (உ-4)

## கொடுப்பனவு

தென்மராட்சி, ஜூன் 15

தென்மராட்சிக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் கல்விக்கழக ஆசிரியர்களுக்கான மே மாத கொடுப்பனவுகள் இன்றும், நாளையும் கோட்டக் கல்வி அலுவலகத்தில் வழங்கப்படுமென உதவிக் கல்விப் பணிப்பாளர் நா. சத்தியநாதன் அறிவித்துள்ளார். (உ-117)

## ஓய்வூதியம்

யாழ் மாவட்டத்தின் உள்ளூராட்சித் திணைக்கள ஓய்வூதியம் பெறுபவர்களினதும், சிவில் ஓய்வூதியம் பெறுபவர்களினதும் ஜூன் மாதத்திற்குரிய பென்சன் வவுச்சர்கள் யாழ் செயலக ஓய்வூதியப் பிரிவிலிருந்து சேர்ப்பிக்க உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது (உ-100)

## வீரமரணம்

கடந்த ஞாயிறன்று அம்பாறை கண்ணகிபுரத்துக்கும், பலங்காட்டுக்கும் இடையில் விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் நடந்த மோதலில் போராளியான 2 ஆம் லெப்டினன்ட் பரணிவேலாகன் அல்லது நிஹால் (புலேந்திரன் பத்மநாதன் — அம்பாறை) வீரமரணமடைந்தார். இந்தச் சம்பவத்தில் தமிழ் மகன் ஒருவரும் கொலைபட்டார். [உ-3]

## விவசாய பயிற்சி வகுப்பு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் விவசாயத் திணைக்களமும் இணைந்து நடத்தும் விவசாயப் பயிற்சி வகுப்பு நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பலோலி கதிர்கோவளம் வீட்டுத் திட்டத்திலும்— மறுநாள் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு உரும்பிராய் பாரதி சனசமூக நிலையத்திலும் நடைபெறும். (ஐ-14)

## இன்று

இலங்கை செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரிப் பாவினர் சாவகச்சேரி பகுதியில் உடனடி முதலுதவிப் பயிற்சிகளைப் புகலை இன்று முதல் நடத்தவுள்ளனர்.

இன்று மாலை 4-30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் [illegible] நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-117]

## இந்துக்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பதிகாரியிடமும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ் வதிவிடப் பிரதிநிதியிடமும் கையளிக்கப்படும்.

### கூடும் ஒழுங்கு

பேரணியில் கலந்து கொள்ளும் மதகுருமார் — கோவில் வெளிமண்டபத்திலும், இந்து அமைப்புக்கள் — கோவில் முன்பாகவும், அரசாங்க திணைக்களங்களைச் சேர்ந்தோர் — வைரவர் கோவில் முன்பாகவும், மாணவர்கள் ஆசிரியர்கள்— வடக்கு வீதியிலும், மகளிர் அமைப்புகளைச் சேர்ந்தோர் — நாவலர் மண்டபம் முன்பாகவும், வணிகர் கழகங்களைச் சேர்ந்தோர் — நாவலர் மண்டபத்தின் கிழக்குப் புறத்திலும், பொதுமக்கள் — கோவில் தெற்கு, மேற்கு வீதிகளிலும் தரித்து நின்று பின்னர் பேரணியில் ஒன்று சேர்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பேரணியின் சீர் ஒழுங்கு மற்றும் அமைதி பேணுகையை பல்வேறான் முதலுதவிப் படை, சாரணர்கள், மக்கள் நலன் புரிக்கழகத் தொண்டர்கள், இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கத் தொண்டர்கள் மற்றும் காவல்துறையினர் மேற்கொள்வர்.

இன்றைய பேரணிக்கு ஆதரவு தெரிவித்தும் அதில் கலந்து கொள்ளுமாறு கோரியும் பல சமய, சமூக அமைப்புக்கள் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

நீதி சமாதானத்திற்கான ஆணைக்குழுவும் இன்றைய பேரணிக்கு ஆதரவு தெரிவிப்பதாக அருட்திரு. கி. ஜெயக்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (அ-4)

## மண்டைதீவு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் உட்பட பத்து மீனவர்கள் படையினரால் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

சுமார் 11 கடற்படை படகுகள் இத்தாக்குதலில் ஈடுபட்டதாகவும் —

இவை மண்டைதீவு படையினருக்கு பொருட்களை இறக்கிக் கொண்டிருந்த கடற்படை கப்பல் ஒன்றுக்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்ததாகவும் —

இச்சம்பவத்தில் தப்பிப் பிழைத்த மீனவர்கள் தெரிவிததனர்.

மூன்று படகுகளில் சென்ற மீனவர்களே படையினரால் பிடித்துச் செல்லப்பட்டதாகவும்—

அந்த மூன்று படகுகளில் ஒன்றைத் தவிர மற்றைய இரண்டு படகுகளும்— வெளியிணைப்பு இயந்திரங்கள் கழற்றப்பட்ட நிலையில் — பின்னர் கடலிலிருந்து மீனவர்களால் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த மீனவரின் சடலம் கிடந்த மற்றைய படகில் கிரனேட் தாக்குதல் சிதறல்கள், துப்பாக்கிச் சூட்டு அடையாளங்கள் என்பன காணப்பட்டன.

மேற்படி மீனவர்களை நேற்றுக் காலை இரண்டு தடவைகள் வழிமறித்த கடற்படையினர் பின்னர் அவர்களைத் தொடர்ந்து தொழில் செய்ய அனுமதித்துச் சென்றதாகவும் —

மூன்றாவது தடவையாக படகில் வந்த மற்றொரு தொகுதிப் படையினரே மீனவரைத் தாக்கி அவர்களில் ஒருபகுதியினரை பிடித்துக் கொண்டு சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது [உ-3-15-51]

## இலங்கையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துப் பேசினர்.

இலங்கைக்குச் செல்லும் கடற்படைக் கப்பல்கள், யுத்த டாங்கிகளை தகர்க்கப் போவதாக பேச்சாளர் ஒருவர் கூறினார். இந்திய தலையீடு ஈழத்தை உருவாக்குவதுடன் சுதந்திரமான தமிழ் நாடொன்றையும் உருவாக்கும் என்றும் அவர் எச்சரித்தார்.

விடுதலைப்புலிகள் கொழும்புக்கோ அல்லது இந்தியாவுக்கோ எதிராக எந்தவித தவறையும் செய்யவில்லை என்று வீரமணியும், நெடுமாறனும் கூறினார்கள்.

இலங்கைக்கு இந்தியத் துருப்புக்கள் அனுப்பப்படின் பெரும் கிளர்ச்சி ஏற்படும் என்று திராவிடக் கழகம் எச்சரித்துள்ளது.

இந்தியத் தலையீட்டுக்கு எதிராக தமிழ்நாட்டில் மக்கள் அபிப்பிராயத்தைத் திரட்ட தமிழ்நாடு முழுவதும் தொடர் கூட்டங்களை நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## விளையாட்டு நிகழ்வுகள்

காங்கேசன்துறை யங்ஸ்ரோர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடக்கும் ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆனைக்கோட்டை அறிவொளி விளையாட்டுக்கழகம் மோதும். (உ-3)

★ ★ ★

வலி- கிழக்கு உதைபந்தாட்டச் சங்கம் இணைந்த விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் — லீக் முறையில் —நாவாந்துறை சென் நிக்கிலஸ் மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3 மணி செ ன் மேரிஸ் அணி எதிர் சென் ஹார்ட்ஸ் அணி.

★ 4 மணி— சென் அன்ரனிஸ் அணி எதிர் வாகீசவரி அணி.

★ 5 மணி— கொய்யாத் தோட்டம் அணி எதிர் சென் அன்ரனீஸ் அணி. (உ-3)

## காங்கேசனு கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறிய கப்பல்கள் அதாவது பயணிகள் கப்பல்களை காங்கேசன்துறை துறைமுகத்துக்குள் சோதனைக்கு அனுமதிப்பது தொடர்பாக அரசுக்கும் தமது குழுவுக்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெறுவதாகவும் — ஜேர்ச் குன்ஸ் தெரிவித்தார்.

### கொழும்பு செய்தி

இதே வேளை —

பருத்தித்துறை — திருகோணமலை, பருத்தித்துறை — கொழும்பு சேவைகளில் ஈடுபடும் சகல கப்பல்களும் காங்கேசன்துறை துறைமுகத்தில் சோதனைக்கு உட்பட வேண்டும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காங்கேசன்துறை துறைமுகத்துக்குள் நடத்தும் சோதனையை கைவிடுமாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு விடுத்த கோரிக்கையை கடற்படையினர் நிராகரித்து விட்டதாக — தஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (அ-3)

## சந்திரிகாவின் மாமியார் காலமானார்

விஜயகுமாரதுங்கவின் தாயாரும், ஜனாதிபதி சந்திரிகாவின் மாமியாருமான கிளாரா குமாரதுங்க (வயது 88) நேற்று மாரடைப்பால் காலமானார்.

விஜயகுமாரதுங்கவின் கொலை தொடர்பான ஆணைக்குழு விசாரணைக்கு இவர் அழைக்கப்பட்டதும் —

சுகயீனம் காரணமாக அவர் விசாரணைக்கு சமுகம் தர முடியாது என்று தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. [உ-3-6]

## சைவசமய அறிவுப் போட்டிப் பரீட்சை - 1995

இணுவில் கந்தசாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு 18-06-1995 இல் நடைபெறவிருந்த மேற்படி பரீட்சை சில தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஞாயிறு 25-06-1995 காலை 9.0) மணிக்கு நடைபெறுமென்பதனை சகல பரீட்சார்த்திகளுக்கும் அறியத் தருகின்றோம்.

இந்துசமய வளர்ச்சிச் சங்கம்,
இணுவில் கந்தசாமி கோயில்
இளந்தொண்டர் சபை.

(8439)

## வெதுப்பியின் (பாணின்) விலை ரூ. 6/-

15-06-95 வியாழக்கிழமை தொடக்கம் உபமூலப்பொருட்களின் விலையேற்றத்தினால் வெதுப்பியின் விலை ரூ. 6/- ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது தற்காலிகமான விலையேற்றம். ஆகவே வியாபாரிகளுக்கு கொடுக்கப்படும் வெதுப்பிக்கான விற்பனைக் கழிவு -/25 சதத்தில் எதுவித மாற்றமும் இல்லையென்பதை சகல வர்த்தகப்பெருமக்களுக்கும் அறியத் தருகின்றோம்.

விலை, தரம், நிறை ஆகியவற்றில் குறைபாடுகள் இருந்தால் எமக்கு அறியத்தரவும்.

மாவட்ட தலைவர்,
யாழ். மா. வெ. உ. சங்கம்
83, அடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

[சி/1498]

## மரண அறிவித்தல்கள்

### நாகமணி குணரத்தினம்
(அச்சுவேலி)

அச்சுவேலியை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது சங்கானையில் வசித்தவருமாகிய நாகமணி குணரத்தினம் 14-06-95 இல் காலமாகிவிட்டார். இவர் கோதநாயகியின் அன்புக் கணவரும், குணநந்தி (கனடா) குணசிறி (ஜேர்மனி), குணசிவ, குணசேகர் ஆகியோரின் அன்பு தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (15-06-95) சங்கானையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சேகர்
[மகன்]

ஆஸ்பத்திரிவீதி,
சங்கானை (37082)

### திருமதி சின்னம்மா சின்னத்தம்பி
(அம்மா)

ஊரங்குணை, குப்பிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னம்மா சின்னத்தம்பி (அம்மா) நேற்று [14.06.1995] காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், பொன்னம்பலம், அம்பலவாணர் [இராசு] (சுவிஸ்) நடராசா (பத்தர் - சுவிஸ்) காலஞ்சென்ற அன்னலக்சுமி (பட்டு) ஆகியோரின் அன்புத்தாயாரும், பாலாமணி, சுசீலா, சாந்தகுமாரி, பாலசுந்தரம் (வெள்ளி) ஆகியோரின் மாமியாரும், பொன்னுப்பிள்ளை, அம்மமா, சின்னத்துரை, (ஐயா) காலஞ்சென்றவர்களான இராசம்மா, நவரத்தினம் (ஆசிரியா) அழகம்மா ஆகியோரின் அன்புச்சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை ஏழாலை மேற்கு உத்தமன் சிலையடியில் இன்று (15-06-95) பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். இத்தகவலை உற்றார் உறவினர் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
பு. மனோன்மணி
[பெறாமகள்]

உத்தமன் சிலையடி,
ஏழாலை மேற்கு. [37087]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிரெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292, 2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 15-06-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org